RNI-NO: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 349 | டிசம்பர்.19 2025 வெள்ளிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## மாநிலங்களின் நிதி நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மை தேவை: அமைச்சர் நிர்மலா சீதாராமன் வலியுறுத்தல்



புதுடெல்லி, டிச,19-

நிதி நிர்வாகத்தில் மாநிலங்கள் வெளிப்படைத்தன்மையுடன் நடந்துகொள்ள வேண்டும் என்று மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் வலியுறுத்தி உள்ளார்.டைம்ஸ் நெட்வொர்க் இந்தியா பொருளாதார மாநாட்டில் கலந்து கொண்ட அவர் இதுகுறித்து கூறியதாவது: நிதி நிர்வாகத்தில் வெளிப்படைத் தன்மைக்காக மத்திய அரசு தெளிவான இலக்குகளை நிர்ணயித்து அதனை சரியாக கடைபிடித்துள்ளது. இதனால் கடன் அளவு குறைந்துள்ளது. இதேபோல் மாநிலங்களும் தங்களது நிதி மேலாண்மையில் வெளிப்படைத் தன்மையுடன் செயல்பட வேண்டும்.அடுத்த நிதி யாண்டில் கடன் அளவைக் குறைப்பதிலும் அதிக கவனம் செலுத்தப்படும். வரும் 2047ம் ஆண்டுக்குள் வளர்ந்த நாடாக மாறும் நமது இலக்கை அடைவதற்கு மாநிலங்கள் தங்களது கடன் அளவுகளை குறைக்க வேண்டும்.பட்ஜெட் தயாரிப்பில் வெளிப்படைத்தன்மைக்கு தெளிவான இலக்குகளை மத்திய அரசு வரையறுத்துள்ளது. இதன் மூலம் நிதி மேலாண்மை அனைவருக்கும் தெரியும் வகையிலும், மிக உயர்ந்த பொறுப்புடமையும் உறுதி செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

## “திமுக ஒரு தீய சக்தி; தவெக ஒரு தூய சக்தி” ஈரோட்டில் விஜய் பரபரப்பு பேச்சு



சென்னை:, டிச,19-

“24 மணி நேரமும் விஜயை எப்படி மடக்கலாம்; தவெகவை எப்படி முடக்கலாம் என்றுதான் நினைக்கிறார்கள். திமுக ஒரு தீயசக்தி. தவெக ஒரு தூயசக்தி” என தவெக தலைவர் விஜய் தெரிவித்துள்ளார்.ஈரோடு மாவட்டத்தில் நடந்த தவெக மக்கள் சந்திப்பு பொதுக்கூட்டத்தில் பேசிய விஜய், “நல்ல காரியங்கள் தொடங்குவதற்கு முன்பு மஞ்சள் வைத்து தான் தொடங்குவார்கள். மங்களகரமான மஞ்சள் விளையும் பூமி தான் ஈரோடு. விவசாயத்துக்கு கவசமாக உள்ளது காளிங்கராயன் அணை. உங்களை நம்பி தான் வந்திருக்கிறேன், வாழ்நாள் முழுவதும் நன்றியோடு இருப்பேன். சூழ்ச்சிக்காரர்களுக்கு தெரியாது, இது 30 வருடங்களுக்கும் மேலாக நீடிக்கின்ற உறவு. பெற்ற தாய் தரும் தைரியத்தை நண்பா, நண்பிகள், தோழர்கள், தோழிகள் தருகிறார்கள்.பெரியார் பெயரை சொல்லி கொள்ளை அடிக்காதீர்கள். நமது அரசியல் எதிரி திமுக; கொள்கை எதிரி பாஜக. தவெக ஒரு பொருட்டில்லை என்றால் ஏன் கதறுகிறீர்கள்?. கொள்ளையடித்து வைத்துள்ள பணம்தான் உங்களுக்குத் துணை; ஆனால் எனக்கு இந்த மாஸ் தான் துணை. களத்தில் உள்ள எதிரிகளை மட்டும் தான் எதிர்ப்போம். களத்தில் இல்லாதவர்களை எதிர்க்க நேரமில்லை.எத்தனை எத்தனை பொய்யான வாக்குறுதிகள். நீட் ரத்து, கல்வி கடன் ரத்து, கேஸ் சிலிண்டர் மானியமாக 100 ரூபாய் கொடுப்போம் என்று அடித்து விட்டார்கள். இன்றுவரை ஏதாவது செய்தார்களா? இவர்கள் எப்போதுமே சொல்வது ஒன்று, செய்வது ஒன்றுதான்24 மணி நேரமும் விஜயை எப்படி மடக்கலாம்; தவெகவை எப்படி முடக்கலாம் என்றுதான் நினைக்கிறார்கள். தனிப்பட்ட முறையில் அசிங்கமாக பேசுவது தான் அரசியல் என்றால் அது எனக்கு வராது. நான் எத்தனை நிமிஷம் பேசினால் என்ன? எப்படி பேசினால் என்ன? விஷயம் என்ன என்று பாருங்கள். நாங்கள் வாயிலேயே வடை சுட திமுகவா... தவெக. திமுக ஒரு தீயசக்தி. தவெக ஒரு தூயசக்தி” இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## அமெரிக்க வரி சிக்கலுக்கு தீர்வு காண பிரதமருக்கு முதல்வர் ஸ்டாலின் வலியுறுத்தல்



சென்னை, டிச.19-

அமெரிக்க வரி விதிப்பால் தமிழகத்தில் ஏற்றுமதித் துறையில் கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதனை விரைவில் களைய நடவடிக்க வேண்டும் என பிரதமர் மோடிக்கு முதல்வர் ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.கடிதத்தில் முதல்வர் ஸ்டாலின் கூறியிருப்பதாவது: அமெரிக்க வரிவிதிப்பால் திருப்பூர், கோவை, ஈரோடு மற்றும் கரூர் ஆகிய ஊர்களின் ஏற்றுமதித் துறைகளில் கடும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. வேலூர், ராணிப்பேட்டை மற்றும் திருப்பத்தூரில் உள்ள காலணி உற்பத்தி நிறுவனங்களிலும் இதேபோன்ற மோசமான சூழ்நிலை காணப்படுகிறது. இதன் காரணமாக, லட்சக்கணக்கான வேலைவாய்ப்புகள், குறிப்பாக பெண்களுக்கான வேலைவாய்ப்புகள் பறிபோகும் நிலை உள்ளது. இருதரப்பு ஒப்பந்தம் மூலம் இந்த வரிச் சிக்கலை விரைவில் தீர்ப்பதற்கு முன்னுரிமை அளித்திடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அமெரிக்க வரி விதிப்பால் தமிழகத்தில் ஏற்றுமதித் துறையில் கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதனை விரைவில் களைய நடவடிக்க வேண்டும். இவ்வாறு முதல்வரி ஸ்டாலின் கூறியுள்ளார்.ரஷ்யாவிடம் இருந்து பெட்ரோலியம் வாங்குவதற்கு எதிர்ப்பு தெரிவித்து அமெரிக்கா இந்தியா பொருட்கள் மீதான இறக்குமதி வரியை 50 சதவீதமாக உயர்த்தி உள்ளது. இதனால் ஜவுளி துறை கடுமையான பாதிப்பை எதிர்கொண்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது



■ மதுரை கிழக்கு (வடக்கு) ஒன்றியம் கள்ளந்திரி ஊராட்சி அம்மச்சியாபுரம் கிராமத்தில் புதிய கிராம சாவடியை மக்களின் பயன்பாட்டிற்கு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் மூர்த்தி திறந்து வைத்தார். வட்டார வளர்ச்சி அலுவலர் சரஸ்வதி, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் ஆசைத்தம்பி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## வேலூர் மாவட்ட பாரதிய ஜனதா கட்சி சார்பில் தமிழகம் தலை நிமிர தமிழனின் பயணம் மாபெரும் பொதுக்கூட்டம் 5000க்கும் மேற்பட்டோர் பங்கேற்பு

### வேலூர் மாவட்டம் மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் பங்கேற்று சிறப்புரை



வேலூர் டிச.19

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, வேலூர் பழைய பேருந்து நிலையம் அருகே மண்டித்தெருவில் தமிழகம் தலை நிமிர தமிழனின் பயணம் மாபெரும் பொதுக்கூட்டம் மாவட்டத் தலைவர் தசரதன் தலைமையில் நடந்தது.

மாவட்ட பொதுச்செயலாளர் சரவணக்குமார் வரவேற்று பேசினார். மாவட்ட பார்வையாளர் நரேந்திரன் மாநில செயற்குழு உறுப்பினர் பாஸ்கர் முன்னாள் மாவட்ட தலைவர் மனோகரன் உள்ளிட்ட நிர்வாகிகள் முன்னிலை வகித்தனர். மாநில பொதுச்செயலாளர் கார்த்தியாயினி, அமைப்பு செயலாளர் கருப்பு முருகானந்தன், மாநில செயலாளர் வெங்கடேசன், அதிமுக அமைப்பு செயலாளர் ராமு, மாநகர் மாவட்ட செயலாளர் அப்பு, புறநகர் மாவட்ட செயலாளர் வேலழகன், புதியநீதி கட்சி நிர்வாகிகள் உள்ளிட்ட தேசிய ஜனநாயக கூட்டணியை சேர்ந்த கட்சி நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

இதில்சிறப்பு விருந்தினராக பாரதிய ஜனதா கட்சி மாநில தலைவரும், திருநெல்வேலி சட்டமன்ற உறுப்பினருமான நயினார் நாகேந்திரனின் பங்கேற்று சிறப்புரை ஆற்றிய போது மத்திய அரசு தமிழக அரசுக்கு என்ன செய்துள்ளது என்று கேள்வி கேட்கிறார்கள். பிரதமர் மோடி பதவியேற்ற நாளிலிருந்து 14 லட்சம் கோடியே 83 ஆயிரம் ரூபாய்க்கு மேல் தமிழகத்திற்கு நிதி வழங்கியுள்ளார். இந்த நிதியானது விவசாயிகளின் நலனுக்காகவும், போக்குவரத்து வசதிகளை மேம்படுத்த பாலங்கள் மற்றும் தேசிய நெடுஞ்சாலைகள் மேம்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்டங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டது. மதுரைக்கு அடுத்து அதிக ஊழல் செய்த மாநகராட்சியாக வேலூர் மாநகராட்சி உள்ளது.

வேலூருக்கு தோல் தொழிற் பூங்கா கொண்டு வருவதாக சொன்னார்கள் கொண்டு வந்தார்களா..? பெண்களைப் இழிவாக பேசுகிற ஒரே கட்சி திமுக தான் தமிழகத்தில் அதிக அளவில் போதைப்பொருள் நடமாட்டம் உள்ளது. கிராமங்களில் கூட சர்வ சாதரணமாக கஞ்சா விற்பனை செய்யப்படுகிறது. போலீஸ் திமுகவுக்கு தான் கட்டுப்படுகிறது சட்டத்துக்கு அல்ல. நாங்கள் ஒரு கொடி கட்டினால் உடனே வருகிறார்கள். ஒரு பெண் டாக்டரை 5 பேர் கடத்திச்சென்று பலாத்காரம் செய்த கொடுமையும், ஓடும் ரயிலில் கர்ப்பிணி பெண் பாலியல் தொல்லைக்கு ஆளாக்கப்பட்டு தள்ளிவிடப்பட்டதும் வேலூரில் நடந்துள்ளது. வேலூர் காகிதப்பட்டறையில் ஒரே இடத்தில் 5 டாஸ்மாக் கடைகள் உள்ளது. வேலூரில் இளம் சிறார் கர்ப்பம் அதிகமாக உள்ளது இதற்கு எல்லாம் காரணம் போதை பழக்கம் தான். பாலாற்றில் தடுப்பணை கட்டப்படும் என்றார்கள் ஆனால் கழிவுநீர், குப்பையால் பாலாறு இன்று பாழாகி உள்ளது. வரும் தேர்தலில் 200 தொகுதிக்கு மேலாக தேசிய ஜனநாயக கூட்டணி வெல்லும். ஆன்மீகம் தலைத்தோங்க வேண்டும் என்பதற்காக இபிஎஸ் தலைமையில் மோடி அமைத்த கூட்டணி இது. திருப்பரங்குன்றத்தில் தீபம் ஏற்ற ஒரே ஒரு பொதுமக்கள் கூட எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. எதிர்ப்பு தெரிவித்த ஒரே நபர் முதல்வர் ஸ்டாலின் தான். நீதிக்கு தலைவணங்காத ஆட்சி நிச்சயம் தூக்கி எறிய வேண்டிய ஆட்சி. நீதிபதி மீது அவதூறு வழக்கு கொண்டு வந்த ஒரே கட்சி திமுக தான். இந்த ஆட்சியில் 7 ஆயிரத்துக்கும் மேலான கொலைகள் நடந்துள்ளது, 4 ஆயிரத்து 59 போக்சோ குற்ற வழக்குகள் பதிவு செய்யப்பட்டு உள்ளது. இன்றைக்கு மெட்ரோ, வந்தே பாரத், தேசிய நெடுஞ் சாலைகள் மூலம் மிக விரைவாக பயணிக்க முடிகிறது. அதை கொண்டு வந்தது பாஜ அரசின் பிரதமர்கள் வாஜ்பாய் மற்றும் மோடி. இவர்கள் போட்ட தேசிய நெடுஞ்சாலையில் திமுகவினரும் செல்கின்றனர். ஏன் திமுக போட்ட சாலையில் மட்டும் தானே நீங்க போக வேண்டும் பாஜகாரர்கள் போட்ட சாலையில் ஏன் பயணம் செய்ய வேண்டும். இந்த ஆட்சியில் எதாவது ஒரு மருத்துவ கல்லூரியையாவது கொண்டு வந்தார்களா? எல்லாத்துக்கும் கோர்டுக்கு செல்கிறது திமுக. மக்கள் நலனில் திமுகவுக்கு அக்கறை இல்லை. திருநெல்வேலியில் நான் கடந்த முறை 30 ஆயிரம் வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெற்றேன். வரும் தேர்தலில் 60 ஆயிரம் வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறுவேன். ஏனென்றால் அங்கு 30 ஆயிரம் பேர் எஸ்ஐஆர் மூலம் நீக்கப்பட்டிருக்கிறார்கள் அவர்கள் எல்லாம் இறந்தவர் பட்டியலில் இருப்பவர்கள். இத்தனை ஆண்டுகாலம் இறந்தவர்கள் திமுக வடிவில் வந்து வாக்களித்து இருக்கிறார்கள். காட்பாடியில் 15 ஆயிரம் இறந்தவர்கள் வாக்குகள் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது. அனைத்து சட்டசபை தொகுதிகளில் தலா 20 கோடி ரூபாய் வரை பதுக்கி வைக்கப்பட்டு உள்ளது உரிய நேரத்தில் பறிமுதல் செய்யப்படும் என இவ்வாறு அவர் பேசினார். இக்கூட்டத்தில் பாரதிய ஜனதா கட்சி நிர்வாகிகள் பொறுப்பாளர்கள் உறுப்பினர்கள் பொதுமக்கள் உட்பட 5000த்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## நெல்லை மாவட்டத்தில் மழை குறைந்ததை தொடர்ந்து விவசாய பணிகள் தீவிரம்

நெல்லை, டிச.19-

நெல்லை மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை பெய்ய துவங்கினால் அணைகளில் போதிய தண்ணீர் கிடைக்கும். ஆனால் இந்த ஆண்டு வடகிழக்கு பருவமழை போதிய அளவு பெய்யவில்லை. அணைகளில் நீர்மட்டம் வெகுவாக குறைந்து காணப்பட்டது. இந்நிலையில்தான் வங்கக் கடலில் ஏற்பட்டுள்ள காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக கடந்த வாரம் மூன்று நாட்கள் தொடர் மழை பெய்தது.

இதனால் தாமிரபரணி ஆற்றில் காட்டாற்று வெள்ளம் கரை புரண்டு ஓடியது. இதைதொடர்ந்து நெல்லை மாவட்ட நீர்பிடிப்பு பகுதிகளான பாபநாசம், மணிமுத்தாறு, சேர்வலாறு உள்ளிட்ட பகுதிகளில் பெய்த மழையால் அணைகளில் நீர்மட்டம் உயர்ந்து சதம் அடித்தது. தொ டர்மழை காரணமாக விளைநி லங்களில் தண்ணீர் தேங்கி நின்றது. விவசாய பணிகளை பார்க்க முடியாத நிலை தொடர்ந்தது. மேலும் பல இடங்களில் தொடர் மழைக்கு நெல், வாழை, கரும்பு உள்ளிட்ட பயிர்கள் சேதம் அடைந்தது. இதைதொடர்ந்து தாமிர பரணி ஆற்றில் வெள்ளம் தணிந்தது. இதனால் வயல்வெளிகளில் தேங்கிய தண்ணீரும் வடிந்தது. இந்நிலையில் மாவட்டம் முழுவதும் கடந்த சில நாட்களாக வெயில் அடித்து வருவதால் மழையின் காரணமாக விவசாய பணிகளை ஒத்தி வைத்திருந்த விவசாயிகள் மீண்டும் விளைநிலங்களில் பணிகளை தீவிரப் படுத் தினர். நெல்லை மாவட்டம் அம்பாசமுத்திரம், வீரவநல்லூர், சேரன்மகாதேவி, மானூர், பாளை, சீவலப்பேரி உள்ளிட்ட பகுதிகளில் விவசாயிகள் வயல்களில் தொளியடிப்பது, நாற்றுக்களை நடுவது, நடப்பட்ட நாற்றுக்களுக்கு உரம் இடுவது, களை எடுப்பது உள்ளிட்ட பல்வேறு பணிகளில் தீவிரம் காட்டி வருகின்றனர்.

## சிவகங்கை மாவட்டம் சிவகங்கை மற்றும் சிங்கம்புணரி அ.காளாப்பூர் துணை மின் நிலையத்தில் மின்தடை (டிச20) காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை

சிவகங்கை, டிச.19-

சிவகங்கை மாவட்டம் சிவகங்கை நகர் மற்றும் காமராஜர் காலனி, பையூர், காஞ்சிரங்கால், வந்தவாசி கூத்தாண்டன், வாணியங்குடி, கீழக்கண்டனி சுந்தர் நடப்பு, சோழபுரம், சூரக்குளம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகள்.

சிங்கம்புணரி துணை மின் நிலையத்தில் மின் பராமரிப்பு காரணமாக சிங்கம்புணரி, கிருங்காக்கோட்டை, அணைக்கரைப்பட்டி, ஒடுவன்பட்டி, மேலப்பட்டி, கண்ணமங்கலப்பட்டி, கோட்டைவேங்கைபட்டி, செருதப்பட்டி, என்ஃபீல்ட் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகள்.

சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரி வட்டம் அ.காளாப்பூர் துணை மின் நிலைத்திலிருந்து மின்விநியோகம் செய்யப்படும் முக்கிய ஊர்களான எஸ்.வி.மங்களம், அ.காளாப்பூர், பிரான்மலை, வேங்கைபட்டி, வையாபுரிபட்டி, செல்லியம்பட்டி மற்றும் சுற்றி வட்டார பகுதிகள். மின்தடை இருக்காது என மின்செயர் பொறியாளர்கள் தெரிவித்துள்ளனர்.



# பல்லாவரத்தில் கல்லறைக்கு இடம் வேண்டும் என 300 திருச்சபைகளுக்கான கல்லறை நிலத்தை அரசு உடனடியாக வழங்க வேண்டும்

## கிறிஸ்தவ அமைப்பினர் கவன ஈர்ப்பு பொதுக்கூட்டத்தை நடத்தினர்



பல்லாவரம், டிச.19-

செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் பேருந்து நிலையம் அருகே பல்லாவரம் கிறிஸ்தவ பொதுக் கல்லறை கூட்டமைப்பு சார்பில் கவன ஈர்ப்பு பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதில் பல்லாவரம் வட்டாரத்தைச் சேர்ந்த 300 சபைகளைச் சேர்ந்த போதகர்கள் கலந்து கொண்டனர். இப்பகுதியில் 300க்கும் மேற்பட்ட சபைகள் செயல்பட்டு வரும் நிலையில் அதில் ஒன்றரை லட்சம் உறுப்பினர்கள் சபை உறுப்பினர்களாக உள்ளனர். இவர்களுக்கென இருக்கும் சிறு அளவிலான கல்லறைகள் நிரம்பி வழிவதால் குறுகிய காலத்திற்குள் மீண்டும் மீண்டும் ஒரே குழியைத் தோண்டும் அவலநிலை நீடித்து வருகிறது. குடும்பக் கல்லறைகள் போல கட்டிக் கொள்ளவும் இடமில்லாத நிலை நிலவி வருகிறது.

இதற்குத் தீர்வு காணும் வகையில் கடந்த 20 ஆண்டு களுக்கும் மேலாக கல்லறை நிலம் பெறுவதற்கு முயற்சித்து வருகின்றனர். ஆட்சியர் உட்பட சம்பந்தப்பட்ட அனைவரையும் சந்தித்த பின்னரும் இடம் கிடைப்பதில் மெத்தனமும், தாமதமும் நிலவி வருகிறது.

இறந்த பின்னர் கூட அந்த உடலை புதைப்பதற்கு நிம்மதியற்ற சூழல்தான் தற்போது நிலவி வருகிறது எனத் தெரிவித்தனர். கல்லறைக்கான இடத்தை தாமதமின்றி ஒதுக்க வேண்டும். அரசு அதிகாரிகளுடன் உடனடி சந்திப்பு ஏற்பாடு செய்து தர வேண்டும் உள்ளிட்ட ஆறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு தங்களது தீர்மாணம் நிறைவேற்றகோரி மரணத்திலும் மரியாதை வேண்டும், கல்லறைக்கு இடம் வேண்டும் என கோஷமிட்டவாறு பொதுகூட்டம் நடைபெற்றது. இதில் தலைவர் சாம் ஜெய பால், துணைத் தலைவர்கள் விசுவாசம், ஜசக்டனியல், செயலாளர் செல்வம், இணைச் செயலாளர்கள் பாஸ்டர் டாக்டர் இமானுவேல் சந்திரன், பிரபுமேனுவல், பொருளாளர் ஜெபஸ்டீன், அப்போஸ்தலர் பாஸ்டர் ஜெயா தங்கராஜ், பாஸ்டர் ஜெயராஜ், பாஸ்டர் டேனியல் லிவிங்ஸ்டன் உட்பட ஏராளமான கிறிஸ்துவ சகோதர, சகோதிரிகள் கலந்து கொண்டனர்

# மாவட்ட ஆட்சியர் டாக்டர்.மனிஷ் நாரணவரே தலைமையில் மாவட்ட அளவிலான குழந்தைகள் பாதுகாப்பு குழுக்கூட்டம்



திருப்பூர், டிச.19-

திருப்பூர் டாக்டர்.மனிஷ் நாரணவரே தலைமையில் கடந்த 16 ஆம் தேதி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் துறையின் சார்பில் மாவட்ட அளவிலான குழந்தைகள் பாதுகாப்பு குழுக்கூட்டம் நடைபெற்றது. திருப்பூர் மாவட்டத்தில் குழந்தைகள் சார்ந்து மேற்கொள்ளப்படும் நலன் சார்ந்த திட்டங்கள், POCSO வழக்குகளில் பாதிக்கப்பட்ட குழந்தைகள், குழந்தை திருமணங்கள் செய்யப்பட்ட குழந்தைகள், குழந்தைத் தொழிலாளர்கள் மற்றும் பல்வேறு குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களில் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கான மறுவாழ்வு நடவடிக் கைகள் குறித்து மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு குழுக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

மேலும், குழந்தைகளின் பிரச்சனைகளை உடனடியாகக் கண்டறிய ஏதுவாக அனைத்து நிலைகளிலும் கிராம அளவில், வட்டார அளவில், பேரூராட்சி அளவில், நகராட்சி அளவில், மாநகராட்சி மண்டல அளவில், வார்டு அளவில் என அனைத்து நிலைகளிலும் குழந்தைகள் பாதுகாப்பு குழுக்கூட்டங்கள் முறையாக மூன்று மாதத்திற் கொருமுறை நடத்திடவும், குழந்தைகள் சார்ந்த பிரச்சனைகள் குறித்து தீர்மானம் மேற்கொண்டு, அதை சரிசெய்வதற்கான நடவடிக் கைகளை மேற்கொள்ளவும், மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களை சமர்பிக்க அறிவுறுத்தப்பட்டது. மேலும், குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் குறித்து பதியப்படும் வழக்குகளின் விபரங்கள் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகுக்கு உடனடியாக வழங்க வேண்டும். இதனால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கான உரிய மறுவாழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், பாதிக்கப்பட்ட குழந்தை களுக்கான இழப்பீடு நிதி பெற்ற வழங்க உறுதுணையாக அமையும்,

இக்கூட்டத்தில் ஆதரவற்ற குழந்தை களின் வாழ்வா தாரம், நலவாழ் விற்கு சிறந்ததொரு வகையில் மாதாந்திர நிதி வழங்கும் விதமாக அன்புக்கரங்கள் திட்டத்தின் கீழ் பெற்றோர் இருவரையும் இழந்த குழந்தைகள், பெற்றோரில் ஒருவர் இறந்து விட்டார் மற்றும் பிறிதொரு பெற்றோர் குழந்தையை கைவிட்டு சென்ற குழந்தைகள். (கைவிடப்பட்ட குழந்தை), பெறோரில் ஒருவர் இறந்துவிட்டார் மற்றும் பிறிதொரு பெற்றோர் மன ரீதியாகவும், உடல் ரீதியாகவும் பாதிக்கப்பட்ட குழந்தைகள், பெற்றோரில் ஒருவர் இறந்து விட்டார் மற்றும் பிறிதொரு பெற்றோர் சிறையிலுள்ள குழந்தைகள், பெற்றோரில் ஒருவர் இறந்து விட்டார் மற்றும் பிறிதொரு பெற்றோர் உயிருக்கு ஆபத்தான நோய்களுடன் வாழ்ந்து வரும் குழந்தைகளுக்கு மாதம் ரூ.2000/ வழங்கப்பட்டு வருவது தொடர்பாகவும், பெற்றோர்கள் இல்லாத குழந்தைகள் இருப்பின் அவர்களை கண்டறிந்து அன்புக்கரங்கள் திட்டத்தில் இணைத்திடவும் அறிவுறுத்தப்பட்டது. இக்கூட்டத்தில், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் என். ரியாஸ் அகமது பாஷா, தன்னார்வ தொண்டு நிறுவனப்பிரதிநிதிகள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.



பெருங்களத்தூரில் 56வது வார்டில் அரசினர் மேல்நிலைப் பள்ளி மற்றும் 59வது வார்டு பீர்க்கங்காரணை அரசினர் மேல்நிலைப் பள்ளியில்

# விலை இல்லா மிதிவண்டிகள் வழங்கினார் 4வது மண்டல தலைவர் டி.காமராஜ்

தாம்பரம், டிச.19-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் சட்டமன்ற தொகுதி உட்பட்ட பெருங்களத்தூர் வடக்கு பகுதி 4வது மண்டலம் 56வது வார்டில் அரசினர் மேல்நிலைப் பள்ளி மற்றும் 59வது வார்டு பீர்க்கங்காரணை அரசினர் மேல்நிலைப் பள்ளியில் தமிழ்நாடு அரசின் விலை இல்லா மிதி வண்டிகளை 4வது மண்டல குழு தலைவர் பகுதி கழக செயலாளர் டி.காமராஜ் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி பின்னர் பள்ளி மாணவ மாணவிகளுக்கு விலை இல்லா மிதிவண்டிகள் வழங்கினார் உடன் தெற்கு பகுதி கழக செயலாளர் மாமன்ற உறுப்பினரும் எஸ்.சேகர், மாமன்ற உறுப்பினர் பி.புகழேந்தி, மாமன்ற உறுப்பினர் ராஜேஸ்வரி சங்கர், முன்னாள் நகர மன்ற தலைவர் சேது மாதவன், வட்டச் செயலாளர் வெங்கடேசன், வட்ட செயலாளர் சுரேஷ், பகுதி கழக நிர்வாகிகள் வட்ட கழக நிர்வாகிகள் பள்ளியின் தலைமை ஆசிரியர் தேவகி மற்றும் ஆசிரியர் ஆசிரியர்கள் பள்ளி மாணவ மாணவிகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்




■ மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மதுரை மத்திய சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட மாநகராட்சி பகுதியில் மேம்பாட்டு பணிகள் மற்றும் அடிப்படை வசதிகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளும் போது பொதுமக்களிடம் பெறப்பட்ட மனுக்கள் மீது எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக் கூட்டம் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாக ராஜன் தலைமையில் நடைபெற்றது. மாவட்டஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் ,மாநகராட்சி ஆணையாளர் சித்ரா விஜயன் ஆகியோர் உடன் உள்ளனர்



தென்காசி மாவட்டம், குற்றாலம் ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரியில் மாவட்ட வேலை வாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் சார்பில் நடைபெற்ற

# தொழில்நெறி வழிகாட்டும் கண்காட்சி மற்றும் கருத்தரங்கினை மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர் துவக்கி வைத்து பார்வையிட்டார்

தென்காசி, டிச.19-

பின்னர் மாவட்ட ஆட்சித் தலைவர் கல்லூரி மாணவியருக்கு தொழில்நெறி வழிகாட்டுதல் தொடர்பாக கருத்துருக்கள் தெரிவிக்கையில்,

தென்காசி மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டு மையம் இணைந்து நடத்தும் தொழில்நெறி வழிகாட்டும் கண்காட்சி மற்றும் கருத்தரங்கு நிகழ்வின் வாயிலாக நீங்கள் உயர்கல்வி முடித்த பின் உங்கள் வாழ்வியல் திட்டங்கள் குறித்து பல்வேறு கருத்துரைகள் வழங்கப்பட உள்ளன. அதாவது பட்டப் படிப்பு முடித்த பின் அரசு வேலை, தனியார் துறை அல்லது சுய தொழில்கள் குறித்து உங்களின் பல்வேறு கேள்விகளுக்கு ஒரே இடத்தில் நம்பகமான தகவலும், சரியான வழிகாட்டுதலும் வழங்குவதற்காக இந்த தொழில்நெறி கண்காட்சி மற்றும் கருத்தரங்கு நிகழ்வு உங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. உங்களிடையே சரியான திட்டமிடல் மிகவும் அவசியமான ஒன்றாகும். ஆகவே, மாணவர்களாகிய நீங்கள் வாழ்வில் முன்னேறுவதற்கு சரியான முறையில் திட்டமிட்டு எந்தத் துறையோ அந்த துறையை சரியான நேரத்தில் தேர்வு செய்து வாழ்வில் முன்னேற வேண்டும். அதற்குரிய வழிகாட்டுதல்கள் நாங்கள் வழங்குவதற்கு தயார் நிலையில் உள்ளோம். ஆகவே மாணவிகளாகிய நீங்கள் இந்த வழிகாட்டு மையத்தில் வழங்கப் படுகின்ற கருத்துக்கள் மற்றும் உங்களிடையே தொழில்நெறி குறித்து நிலவும் சந்தேகங்களை கேட்டு வாழ்வில் அடுத்த நிலைக்கு செல்வதற்கான வழிமுறைகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் கமல்கிஷோர். தெரிவித்துள்ளார்.

பின்னர் மாவட்ட ஆட்சித் தலைவர் மாவட்ட வேலை வாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தின் வருடாந்திர கையேட்டினை வெளியிட்டு, திறன் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு கேடயம் மற்றும் பாராட்டு சான்றிதழ்களை வழங்கினார்கள்.

இக்கருத்தரங்கில், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் திருமதி.ரம்யா, ஸ்ரீ பராசக்தி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் (பொ) முனைவர். மகாலட்சுமி, கடையநல்லூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி பேராசிரியர் முனைவர். பால்மகேஷ், அருள்மிகு செந்திலாண்டவர் பாலிடெக்னிக் கல்லூரி பேராசிரியர் செந்தில்குமார், தென்காசி மாவட்ட திறன் அலுவலர் திருமதி. தனலட்சுமி, உதவியாளர் சங்கர் மற்றும் பேராசிரியர்கள், கல்லூரி மாணவிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தென்காசி மாவட்டம், ஆய்க்குடி ஜே.பி. கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு மையம் மற்றும் நம் தேசம் அறக்கட்டளை சார்பில்

# நாஷா முக்த் பாரத் அபியான்திட்டத்தின் கீழ் நடைபெற்ற போதை ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வினை மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர் துவக்கி வைத்தார்



தென்காசி, டிச.19-

தென்காசி மாவட்டம், ஆய்க்குடி ஜே.பி. கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு மையம் மற்றும் நம் தேசம் அறக்கட்டளை சார்பில் நாஷா முக்த் பாரத் அபியான்திட்டத்தின் கீழ் நடைபெற்ற போதை ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வினை மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர். துவக்கி வைத்தார்.

பின்னர் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவிக்கையில்,

தென்காசி மாவட்டத்தில் போதை ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு குழந்தைகள் பாதுகாப்பு மையம் மற்றும் நம் தேசம் அறக்கட்டளை இணைந்து நாஷா முக்த் பாரத் அபியான்திட்டத்தின் கீழ் நடைபெற்று வருகிறது. இதன் நோக்கம் என்னவென்றால், மாணவர்களிடையே ஏற்படும் போதைப்பொருட்களினால் ஏற்படும் விளைவுகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதாகும். போதைப்பொருட்கள் ஒருவனின் வாழ்க்கையினை கேள்விக்குறியான நிலைக்கு கொண்டு சென்று விடும். போதைப் பொருட்கள் உட்கொள்வதினால் சமுதாயத்தில் பின்னோக்கி செல்வார்கள். போதைப்பொருட்கள் ஆரம்பத்தில் பழகும்போது சுகமாக இருக்கும். அதுவே, காலப்போக்கில் போதைப்பொருட்களுக்கு அடிமையாகி வாழ்வை இழக்கும் நிலைக்கு கொண்டு சென்று விடும். போதைப் பழக்கத்தினால் உங்களுடைய உறவினர்கள், நண்பர்கள் விலகி சென்றுவிடுவார்கள். ஆகவே, போதைப் பழக்கத்திற்கு ஆட்கொள்ளாமல் தூய வழியில் செயல்பட வேண்டும். அது மட்டுமல்லாமல் உங்களுடைய உறவினர்கள் மற்றும் நண்பர்கள் போதைப் பழக்கத்திற்கு ஆளாகி இருந்தால் அவர்களுக்கு மறுவாழ்வினை ஏற்படுத்தி சமுதாயத்தில் நல்ல மனிதராக வருவதற்கு உறுதுணயாக செயல்பட வேண்டும். போதைப் பழக்கத்திற்கு எதிரான பல்வேறு நடவடிக்கைகள் மாநிலம் மற்றும் மத்திய அரசுகள் மேற்கொண்டு வருகின்றன. ஆகவே, நீங்கள் போதை இல்லாத தென்காசி மாவட்டமாக மாற்றிட ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் கமல்கிஷோர். தெரிவித்தார்.

பின்னர் போதைப் பொருட்களுக்கு எதிரான வாசகங்கள் அடங்கிய பதாகைகள், துண்டு பிரசுரங்கள் ஆகியவ ற்றினை மாவட்ட ஆட்சித்தலைவர் வெளியிட்டார்.

தொடர்ந்து, போதைப்பழக்கத்திற்கு எதிரான உறுதிமொழியினை மாவட்ட ஆட்சித்தலைவர் ஏற்றுக்கொள்ள அனைவரும் ஏற்றுக்கொண்டனர்.

இந்நிகழ்வில், கூடுதல் காவல் கண்காணிப்பாளர் ஜீலியஸ் சீசர், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் அலெக்ஸ், துணை காவல் கண்காணிப்பாளர்கள் அதியமான் (போதை தடுப்பு) அறிவழகன் (ICCAW), தென்காசி நகர்மன்ற தலைவர் சாதிர், தென்காசி ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் ஷேக் அப்துல்லா, குழந்தைகள் நலக்குழு அலுவலர் திருமதி. விஜயராணி, நம் தேசம் அறக்கட்டளை நிறுவனர் சந்திரசேகர சீனிவாசன், ஜே.பி. கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் மைக்கேல் மரியதாஸ் மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



■ சிவகங்கை மாவட்டம், தமிழ் வளர்ச்சித்துறையின் சார்பில் அரசு மகளிர் கலைக் கல்லூரியில் நடைபெற்ற 2025 26ஆம் நிதியாண்டிற்கான ஆட்சிமொழி சட்ட வார தொடக்க விழாவில், “கணினித்தமிழ் விழிப்புணர்வுக் கருத்தரங்கம் மற்றும் கணினித்தமிழ் ஒருங்குறி பயன்பாடு” என்னும் பொருண்மையில் அரசுப் பணியாளர்களுக்கான பயிற்சி வகுப்பு தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் திரு தெ.சிவப்பிரகாஷ் முன்னிலையில் நடைபெற்றது.



■ புதுக்கோட்டை மாவட்டம் கரம்பக்குடி தாலுகாவில் அமைந்துள்ள விருந்தினர் மாளிகையில் வருவாய்த் துறையில் பணிபுரியும் பட்டா கிளார்க் ஈஸ்வரி தங்கியிருக்கிறார்கள் அவர்களுக்கு அனுமதி கொடுத்ததுயார்மக்களின்கோரிக்கை

**வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றம் சிவகங்கை**
**ந.க.ஆ1/5716/2025**

அறிவிப்பு

சிவகங்கை மாவட்டம், மானா மதுரை வட்டம். வாகுடி வருவாய் கிராமம். 219வாகுடிகாலனி, முத்தனேந்தல், மானாமதுரை தாலுகா முகவரியில் வசிக்கும் திருமதி. வள்ளி க/பெ. கருப்பையா என்பவரின் தந்தை தவசி என்பவர் கடந்த 22.02.2000 ம் தேதியன்று மேற்படி முகவரியில் இறந்துவிட்டார். மேற்படி இறப்பை பதிவு செய்யாமல் போய் விட்டது. இந்த இறப்பினை பதிவு செய்ய வேண்டி சிவகங்கை உட்கோட்ட நிர்வாக நடுவர் மற்றும் உதவி ஆட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி இறப்பினை பதிவு செய்வது தொடர்பாக எவருக்கேனும் ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு செய்யப்பட்ட நாளிலிருந்து 10 தினங்களுக்குள் சிவகங்கை உட்கோட்ட நிர்வாக நடுவர் மற்றும் உதவி ஆட்சியர் அலுவலகத்தில் தங்களது ஆட்சேபனையை எழுத்துப்பூர்வமாக தெரிவிக்கலாம். அவ்வாறு ஆட்சேபனை எதுவும் வரப்பெறவில்லையெனில், விசாரணை மற்றும் முன்னிடப் பட்டுள்ள ஆவணங்களின் அடிப்படை யில் மனுதார் கோரியவாறுள்ள இறப்பினை பதிவு செய்யஉத்தரவுகள் பிறப்பிக்க கோரப்படும் என்ற விபரம் இதன் மூலம் அறிவிக்கலாயிற்று.

**(திருமதி. வள்ளி**
**க /பெ. கருப்பையா**
**வாகுடி)**



## மக்களிடம் வசூல் வேட்டை கோடிக்கணக்கில் பணமோசடி : பங்கு தந்தையை நீக்க கோரி கிறிஸ்துவ மக்கள் உள்ளிருப்பு போராட்டம்

மதுரை, டிச.19-

ஸ்ரீவில்லிபுத்தூர் கத்தோலிக்க கிறிஸ்தவ திருச்சபை பங்குத் தந்தை அருட்பணி சந்தன சகாயம் ஆலய பணி மற்றும் மக்கள் பணியில் கடந்த 4 ஆண்டுகளாக பல கோடி ரூபாய் மோசடி செய்துள்ளார், அவர் மீது நடவடிக்கை எடுக்க கோரியும், அவரை அந்த பதவியில் இருந்து நீக்க கோரியும் பல முறை மதுரை உயர்மறை பேராயர் அந்தோணிசாமி அவர்களிடம் புகார் தெரிவித்தும் இந்நாள் வரை எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்காததை கண்டித்து, மதுரை புதூர் பகுதியில் உள்ள மதுரை உயர்மறை பேராயர் இல்லத்தின் வளாகத்தில், ஸ்ரீவில்லிபுத்தூர் கத்தோலிக்க கிறிஸ்தவ திருச்சபை பகுதி அனைத்து பொறுப்பாளர்கள் மற்றும் 10 ஊர் நிர்வாகிகள், இறை மக்கள், கிறித்துவ மக்கள் களம் சார்பாக 50க்கும் மேற்பட்டோர் உள்ளிருப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்,



## கண்ணங்குடி ஒன்றியத்திற்குட்பட்டசிறுவனூர் ஊராட்சியில், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் புகைப்படக் கண்காட்சி நடைபெற்றது

சிவகங்கை, டிச.19-

சிவகங்கை மாவட்டம், கண்ணங்குடி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சிறுவனூர் ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் புகைப் படக் கண்காட்சி நடைபெற்றது. இப்புகைப்படக் கண்காட்சியில் தமிழக அரசின் சாதனைகள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கிய புகைப்படங்கள், அமைச்சர் பெருமக்கள் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆகியோர் மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாக்களில் நலத்திட்ட உதவிகள் வழங்கிய புகைப்படங்கள் இடம் பெற்றன.

மேலும், இக்கண்காட்சியில் அரசு திட்டங்கள் குறித்தும், நலத்திட்டங்களை எவ்வாறு பெறுவது, யாரை அணுகி பெறவேண்டும் என்பது குறித்தும் பொதுமக்களுக்கு அலுவலர்களால் விரிவாக விளக்கம் அளிக்கப்பட்டது.

புகைப்படக் கண்காட்சியை பார்வையிட்ட பொதுமக்கள் தமிழக அரசு செயல்படுத்தும் திட்டங்கள் குறித்து தெரிந்து கொள்ளவும், நலத்திட்ட உதவிகளை யாரை அணுகிப் பெறவேண்டும் என்பது குறித்து அறிந்து கொள்வதற்கும் வசதியாக இப்புகைப்படக் கண்காட்சி பெரிதும் உதவியாக இருந்தது என பொதுமக்கள் வாயிலாக தெரிவிக்கப்பட்டது.

இதுபோன்று, பொது மக்களுக்கு பயனுள்ள வகையில் அரசின் சார்பில் நடத்தப் படும் தமிழக அரசின் சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சியினை பார்த்து, அரசின் திட்டங்கள் குறித்து அறிந்து கொண்டு பயன்பெறவேண்டும்.



## மாவட்ட அளவிலான தன்னார்வ நுகர்வோர் அமைப்புகளுடனான காலாண்டு கூட்டம் மற்றும் பொது விநியோகத் திட்டம் தொடர்பான கண்காணிப்பு குழுக் கூட்டம்

தென்காசி, டிச.19-

தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல் கிஷோர். தலைமையில் மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலகம் சார்பில் மாவட்ட அளவிலான தன்னார்வ நுகர்வோர் அமைப்புகளுடனான காலாண்டு கூட்டம் மற்றும் பொது விநியோகத் திட்டம் தொடர்பான கண்காணிப்பு குழுக் கூட்டம் நடைபெற்றது

இக்கூட்டத்தில் நுகர்வோர் நலன் குறித்தும், நுகர்வோர் நலன்களை மேம்படு த்தும் பொருட்டு நடவ டிக்கை மேற்கொள்ளுதல் குறித்து கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் ஈ.ராஜா, மாவட்ட வருவாய் அலுவலர் சீ.ஜெயச்சந்திரன், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் நரசிம்மன், மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் மு.சிவகுமார், மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலரின் நேர்முக உதவியாளர் நா.அழகப்பராஜா, தன்னார்வ நுகர்வோர் பாதுகாப்பு அமைப்பு செயலாளர் சீனிவாசன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## இந்தியாவில் 7 சதவீத வளர்ச்சி: ஐஎம்எப் கீதா கோபிநாத் கணிப்பு

புதுடெல்லி, டிச.19-

நடப்பு நிதியாண்டில் இந்தியப் பொருளாதாரம் குறித்து சர்வதேச நாணய நிதியத்தின் (ஐஎம்எப்) முன்னாள் துணை நிர்வாக இயக்குநர் கீதா கோபிநாத் கூறியதாவது:

தேசிய புள்ளியியல் அலுவலகம் (என்எஸ்ஓ) ஜூலை செப்டம்பர் காலாண்டுக்கான பொருளாதார வளர்ச்சி விகிதத்தை 8.2 சதவீதமாக கணித்திருந்தது. ஆனால், அதற்கு முன்னதாகவே இந்தியாவின்



வளர்ச்சிக்கான கணிப்பை ஐஎம்எப் வெளியிட்டுவிட்டது. நடப்பு நிதியாண்டைப் பொருத்தவரையில் இந்தியாவின் வளர்ச்சி 7 சதவீதமாக இருக்கும். இது, அக்டோபரில் ஐஎம்எப் கணித்த 6.6 சதவீதத்தை விட அதிகம்.

இந்தியாவால் 20 ஆண்டுகளுக்கு 8 சதவீதத்திற்கு நெருக்கமான வளர்ச்சியை தக்கவைத்துக் கொள்ள முடிந்தால் 2047 இலக்குகளை அடையமுடியும். ஆனால், 20 ஆண்டு காலத்திற்கு தொடர்ச்சியாக 8 சதவீத வளர்ச்சியைத் தக்கவைத்துக்கொள்வது அவ்வளவு எளிதானது அல்ல. அதற்குத் தொடர்ச்சியான சீர்திருத்தங்கள் தேவைப்படும். இவ்வாறு கீதா கோபிநாத் கூறினார்.

## பிரதம மந்திரி கிராம சாலைகள் திட்டத்தின் 25ஆம் ஆண்டு வெள்ளி விழாவினை முன்னிட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் விழிப்புணர்வு பேரணியினை தொடங்கி வைத்தார்

கடலூர், டிச.19-

கடலூர், நகர அரங்கில் பிரதம மந்திரி கிராம சாலைகள் திட்டத்தின் 25ஆம் ஆண்டு வெள்ளி விழா கொண்டாட்டத்தினை முன்னிட்டு கல்லூரி மாணவர்கள் மற்றும் அலுவலர்கள் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.




இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் தெரிவித்ததாவது,

பிரதம மந்திரி கிராம சாலைகள் திட்டமானது நாடு முழுவதும் உள்ள கிராமப்புற பகுதிகளின் முன்னேற்றத்திற்காகவும், வளர்ச்சிக்காகவும், கிராமங்களை நகரங்களுடன் சாலை மார்க்கமாக இணைப்பதற்காக மத்திய அரசினால் 2000ஆம் ஆண்டு தொடங்கப்பட்டதாகும். இத்திட்டம் செயல்படுத்தியதன் வாயிலாக சாலை வசதியற்ற கிராமப்புறங்களில் கூட தார் சாலை, ஃபேவர் பிளாக் சாலை உள்ளிட்ட பல்வேறு மேம்படுத்தப்பட்ட சாலை வசதிகள் ஊரக வளர்ச்சித் துறையின் வாயிலாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கடலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் பிரதம மந்திரி கிராம சாலைகள் திட்டத்தின் கீழ் இதுவரை 323 எண்ணிக்கையிலான சாலைப்பணிகள் 757 கி.மீ நீளத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தற்போது பிரதம மந்திரி கிராம சாலைகள் திட்டம் செயல்படுத்தி 25 ஆண்டுகள் முடிவடைந்ததை முன்னிட்டு வெள்ளி விழா கொண்டாட்டம் மாநிலம் முழுவதும் கொண்டாட அறிவுறுத்தப்பட்டுள்ளதை தொடர்ந்து, விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளுடன் மாணவர்கள் மற்றும் அனைத்து நிலை அலுவலர்களும் கலந்துகொண்ட சாலைப்பாதுகாப்பு பேரணி நகர அரங்கிலிருந்து அண்ணா மேம்பாலம் வரை நடைபெற்றது.

மேலும், சாலைபணிகளை அரசு விதிகளின்படி சிறப்பான முறையில் செயல்படுத்திடவும், சாலையின் தரத்தினை மேம்படுத்திடவும் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் உறுதிமொழி ஏற்கப்பட்டது. பொறியியல் பிரிவில் உள்ள அனைத்து நிலை அலுவலர்களுக்கும் சாலையின் தரம் மேம்பாடு குறித்து பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எஸ்.ஜெயக்குமார் இ.கா.ப., மாவட்ட வருவாய் அலுவலர் கோ.புண்ணிய கோட்டி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் ஆட்சியர் ர.அ.பிரியங்கா ஊரக வளர்ச்சித்துறை செயற்பொறியாளர் வரதராஜபெருமாள் உட்பட பலர் உள்ளனர்.



■ சிவகங்கை மாவட்டம்மாநில மாற்றுத்திறனாளிகள் ஆணைய உறுப்பினர் , நகர் மன்ற உறுப்பினர் புஷ்பராஜ் தமிழ்நாடு கூட்டுறவுத்துறை அமைச்சர், சிவகங்கை மாவட்டக் கழக செயலாளர் கேஆர். பெரியகருப்பன் அவர்களை நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார்...

## கோபத்தில் எல்லை தாண்டி இந்தியா நுழைந்தார் பாகிஸ்தான் பெண்

ஜம்மு, டிச.19-

பாக். ஆக்கிரமிப்பு காஷ்மீரின் கோட்லி மாவட்டம் கிம்மா பகுதியைச் சேர்ந்தவர் ஷேனாஸ் அக்தர் (35). இவருக்கும், இவரது தந்தைக்கும் இடையே வாக்கு வாதம் ஏற்பட்டுள்ளது.இதனால் கோபத்தில் வீட்டை விட்டு வெளியேறிய ஷேனாஸ் அக்தர், எல்லைக் கட்டுப்பாட்டுப் பகுதியைக் கடந்து ஜம்மு காஷ்மீரின் பூஞ்ச் மாவட்டத்துக்குள் புகுந்தார். இதையடுத்து அந்தப் பெண்ணை ராணுவத்தினர் பிடித்து விசாரணை நடத்தினர். வீட்டில் தந்தையுடன் ஏற்பட்ட தகராறு காரணமாக பூஞ்ச் பகுதிக்குள் நுழைந்ததாக தெரிவித்தார்



## இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட அளவிலான வங்கியாளர்களுடான ஆலோசனைக்கூட்டம்

இராமநாதபுரம், டிச.19-

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட அளவிலான வங்கியாளர்களுடான ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ம்ரன்ஜீத் சிங் காலோன் தலைமையேற்று வங்கிகள் மூலம் பொதுமக்களுக்கு மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டங்கள் குறித்து ஆய்வு செய்து தெரிவிக்கையில்,

அரசின் மானிய திட்டங்கள் வங்கிகளின் மூலம் பொது மக்களுக்கு சென்றடைகின்றன. குறிப்பாக மாவட்ட தொழில் மையம், தாட்கோ, மாற்றுத் திறனாளி நலத்துறை, வேளாண் மைத்துறை, கால்நடை பராமரிப்பு துறை, மீன்வளத்துறை போன்ற துறைகள் மூலம் பொதுமக்களுக்கான கடன் திட்டங்கள் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கு உரிய கடன் தொகை வங்கிகள் மூலம் வழங்கப்படுகிறது. மானிய கடன் திட்டங்கள் வங்கியின் மூலம் வழங்குவதால் தேர்வு செய்யப்பட்ட துறைகள் பயனாளிகளுக்கான மானிய தொகையினை விடுவிக்க பரிந்துரை செய்யப்படும். இதன் மூலம் கடன் பெறும் பயனாளிகள் கடன்களை திரும்பி செலுத்துவதற்கு ஏதுவாக இருக்கும். கடந்த மாதங்களில் நடந்த கல்விக்கடன் முகாம் மூலம் கல்விக்கடன் எண்ணிக்கை மாவட்டத்தில் உயர்ந்துள்ளது. தற்சமயம் உரிமை கோரப்படாத வங்கி கணக்குகளின் இருப்பு தொகையை திரும்பப் பெற டிசம்பர் 30 வரை முகாம் ரிசர்வ் வங்கி மூலம் நடத்தப்பட்டு வருகிறது. வங்கிகளை பொறுத்தவரை பெறக்கூடிய மனுக்களை பரிசீலனை செய்து பயனாளிகளுக்கான கடன் தொகையினைதாமதமின்றி வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என தெரிவித்த துடன், மாவட்ட அளவிலான முன்னுரிமை கடன்களுக்கான இலக்கை அடைய இந்த நிதியாண்டில் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் கார்த்திகேயன் ரிசர்வ் வங்கி (பொறுப்பு) அலுவலர் (இராமநாதபுரம்) அன்பரசு மாவட்ட வளர்ச்சி மேலாளர் (நபார்டு) அருண்குமார் அரசு அலுவலர்கள் மற்றும் வங்கியாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## தவெக தலைவர் விஜய் சீண்டலுக்கு அதிமுக ரியாக்ஷன் என்ன? - ஒரு விரைவுப் பார்வை

மதுரை, டிச.19-

ஆரம்பத்தில் திமுகவை மட்டுமே குறிவைத்து விமர்சனம் செய்து வந்த விஜய், சமீப காலமாக அவ்வப்போது அதிமுகவையும் மறைமுகமாக சீண்டி வருகிறார். கடைசி நேரத்தில் தவெகவுடன் கூட்டணி அமைக்கலாம் என்ற யோசனையில், தற்போது வரை தவெகவையும், அதன் தலைவர் விஜய்யையும் மறந்தும் கூட அதிமுக விமர்சனம் செய்யவதில்லை. ஆனால், விஜய்யின் பேச்சையும், அவரது அரசியல் நடவடிக்கைகளையும் பார்க்கிறபோது, தேர்தல் நேரத்தில் இரு திராவிட கட்சிகளையும் விஜய் இன்னும் கடுமையாக எதிர்க்கத் தொடங்குவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

தவெக தலைவர் நடிகர் விஜய் இன்று ஈரோடு பெருந்துறையில் நடந்த மக்கள் சந்திப்பு கூட்டத்தில் பேசுகையில், “அண்ணா, எம்ஜிஆர் பெயரை பயன்படுத்தக் கூடாது என்று யாரும் சொல்வதற்கு உரிமையில்லை. தமிழகத்தின் சொத்து. எம்ஜிஆரும், ஜெயலலிதாவும் திமுகவை தீய சக்தி என்று சொல்வது



உண்மைதான். அண்ணன் செங்கோட்டையன் நம்முடன் வந்து சேர்ந்தது நமக்கு பெரிய பலம். அவரைப் போல் இன்னும் நிறைய பேர் சேர இருக்கிறார்கள். அவர்களுக்கு உரிய அங்கீ காரத்தை கொடுப்போம்” என்றார். விஜயின் இந்தப் பேச்சு, அதிமுக வட்டாரத்தில் அதிர்வலையை ஏற்படுத்தி உள்ளது. அதேபோல், ஒவ்வொரு மேடையிலுமே ‘திமுகவுக்கும் தவெகவுக்கும் தான் போட்டி’ என தேர்தல் களத்தில் அதிமுக முன்னிலையில் இல்லாதது போன்ற தோற்றத்தை உருவாக்கும் வகையில் பேசுவதை விஜய் தவறுவதே இல்லை.

“ஏன் நிர்வாகிகள் இன்னும் தவெகவுக்கு பதிலடி கொடுக்காமல் அமைதி காக்கிறார்கள்” என்று அதிமுக தொண்டர்கள் கொதித்துப் போயுள்ளனர். ‘இன்னும் நிறைய பேர் வருவார்கள்’ என விஜய் சும்மா கொளுத்திப் போட்டு சென்றாரா அல்லது அவரிடம் அதிமுகவை சேர்ந்தவர்கள் ரகசியமாக பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டு இருக்கிறார்களா என்ற கேள்வியும் இப்போது அதிமுக வட்டாரத்தில் எழுந்துள்ளது.

இது குறித்து அதிமுக சட்டப்பேரவை எதிர்கட்சித் துணைத் தலைவரும், முன்னாள் அமைச்சருமான ஆர்.பி.உதயகுமாரிடம் கேட்டபோது, “தலைமைக் கழகத்தில் மனு கொடுக்க வருவோர் குவிந்து வருகிறார்கள். பொதுச் செயலாளர் பழனிசாமி தங்கள் தொகுதியில் போட்டியிட வேண்டும் என்று சாதாரண தொண்டன் முதல் நிர்வாகிகள் வரை போட்டிப் போட்டு ஆர்வமாக மனு கொடுக்கிறார்கள். விருப்ப மனு பெறுவது அதிமுகவில் எழுச்சியாக திருவிழா போல் உள்ளது. (விஜய்) தங்கள் கட்சியை பெருமைப்படுத்துவதற்காக சில கருத்துகளை சொல்வார்கள். தனது கட்சித் தொண்டர்களுக்கு நம்பிக்கை ஊட்டுவதற்காக செல்வார்கள். பெரிதுபடுத்த வேண்டாம்.

இந்தக் கருத்தை செங்கோட்டையனும் சொல்லிக் கொண்டு இருக்கிறார். ஆனால், இதுவரை யாராவது அங்கு போய் சேர்ந்தார் களா? இதுவரை அவரை நம்பி யாரும் செல்வி ல்லை. இனிமேலும் சேரமாட் டார்கள்.

பாதை தவறி சென்றவர்களால் சரியான அரசியல் பாதையை அமைத்துக் கொடுக்க முடியாது, காட்டவும் முடியாது என்பது அதிமுக தொண்டர்கள், நிர்வாகிகள், அரசியல் வரலாறு தெரிந்தவர்கள் அனைவரும் நன்கு அறிவார்கள்.

(தவெக) ஆரம்பத்தில் தொண்ட ர்களை நம்பி கட்சியை தொடங்கிறார்கள். தற்போது மாற்றுக் கட்சி தலைவர்களை எதிர்பார்க்கிறார்கள் என்றால், கரூர் சம்பவத்துக்கு முன் அவரது (விஜய்) பேச்சுக்கும், கரூர் சம்பவத்துக்குப் பின்பு அவரது பேச்சுக்கும் நிறைய மாறுபாடு ஏற்பட்டுள்ளது. தொண்டர்களின் நம்பிக்கையை பெற முழு கவனமாக பேசுகிறார்கள்” என்றார்.




■ தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கடந்த 15 ஆம் தேதி சென்னை, ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கிலிருந்து காணொலிகாட்சி வாயிலாக நகர்புற உள்ளாட்சிகளுக்கான டாக்டர் கலைஞர் விளையாட்டு உபகரங்கள் வழங்கும் நிகழ்சியை தொடங்கி வைத்ததை தொடர்ந்து. தமிழ் வளரச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் திருப்பூர் மாவட்டம், திருமுருகன்பூண்டி நகராட்சி, விஷ்வாஷ் மஹாலில் டாக்டர். கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சி வார்டுகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் அடங்கிய தொகுப்புகளை கொண்டு செல்லும் வாகனத்தை கொடியசைத்து துவக்கி வைத்தார்கள். உடன் மாவட்ட ஆட்சியர் டாக்டர். மனிஷ் நாரணவரே திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், மாவட்ட விளையாட்டு அலுவலர் ரகுகுமார் ஆகியோர் உள்ளனர்.



■ திருப்பூர் மாநகராட்சி ஆணையாளர் எம்.பி.அமித் மண்டலம்1, வார்டு21, புகழும் பெருமாள் வீதியில் உள்ள வீடுகளில் பொது மக்கள் குப்பைகளை மக்கும் குப்பை, மக்காத குப்பை என தரம் பிரித்து தூய்மை பணியாளர்களிடம் வழங்குவதை நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்க்கொண்டார். உடன் மாநகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் உள்ளனர்.

# புகழ்பெற்ற வேலூர் ஸ்ரீபுரம் ஸ்ரீ நாராயணி தங்கக் கோயிலில் குடியரசுத் தலைவர் சுவாமி தரிசனம்

## தமிழக ஆளுநர் ரவி, அமைச்சர் காந்தி மற்றும் மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி ஆகியோர் குடியரசுத் தலைவருக்கு பூங்கொத்து வழங்கி மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்

வேலூர், டிச.19-

வேலூர் மாவட்டம், வேலூர் வட்டம், அணைக் கட்டு தாலுகா, திருமலைக்கோடி பகுதியில் அமைந்துள்ள புகழ்பெற்ற வேலூர் ஸ்ரீபுரம் ஸ்ரீ நார ாயணி தங்கக் கோயிலில் இந்திய குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு சுவாமி தரிசனம் செய்தார். குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு திருப்பதியில் சுவாமி தரிசனம் செய்துவிட்டு, ஹெலிகாப்டர் மூலம் நாராயணி குழுமத்தின் ஹெலிகாப்டர் தளத்தில் இறங்கினார். குடியரசுத் தலைவரின் வருகையை முன்னிட்டு அரசின் சார்பில் பலத்த பாதுகாப்பு மற்றும் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

ஹெலிகாப்டரில் இருந்து இறங்கியவுடன் தமிழக ஆளுநர் ஆர்.என். ரவி, தமிழ்நாடு அரசின் சார்பில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி மற்றும் மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி, ஐ.ஏ.எஸ். ஆகியோர் அன்புடன் பூங்கொத்து வழங்கி மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்.

இதனைத் தொடர்ந்து இந்திய குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு ஸ்ரீ லட்சுமி நாராயணி அம்மனை வழிபட்டார். தங்கக் கோயிலின் வரலாறு மற்றும் முக்கியத்துவம் குறித்து கோயில் நிறுவனர் சக்தி அம்மா விளக்கினார்.

பின்னர் தியான மண்டபத்தில் அமைந்துள்ள ஸ்ரவண மகாலட்சுமி ஆரத்தியை தரிசனம் செய்து, மலர் தூவி குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு சிறப்பு தரிசனம் செய்தார். தங்கக் கோயிலை சுற்றிப் பார்த்த பின்னர், சக்தி அம்மா குடியரசுத் தலைவருக்கு தங்க கிரீடத்தால் ஆசீர்வாதம் வழங்கி, பிரசாதம் மற்றும் பட்டு வஸ்திரம் வழங்கினார்.



ஸ்ரீ நாராயணி குழுமம், ஸ்ரீ நாராயணி பீடம் சாரிட்டபிள் டிரஸ்ட் இயக்குநர் சுரேஷ்பாபு குடியரசுத் தலைவருக்கு நினைவு பரிசு வழங்கி சிறப்பித்தார். ஆலய தரிசனத்தால் குடியரசுத் தலைவர் மிகுந்த மகிழ்ச்சியடைந்ததாக தெரிவித்துள்ளார்.

பின்னர் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு ஹெலிகாப்டர் மூலம் திருப்பதிக்கு புறப்பட்டுச் சென்றார்.

இந்த நிகழ்வின்போது திருமலைக்கோடி, ஸ்ரீபுரம் ஸ்ரீ நாராயணி பீடம் தங்கக் கோயில் மேலாளர் சம்பத், நாராயணி மருத்துவமனை இயக்குநர் டாக்டர். பாலாஜி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். குடியரசுத் தலைவர் வருகையை முன்னிட்டு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மயில் வாகனன் தலைமையில் 1500க்கும் மேற்பட்ட காவல் துறையினர் வேலூர் ஸ்ரீபுரம் சுற்றுவட்டார பல்வேறு இடங்களில் பலத்த பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

மேலும், குடியரசுத் தலைவர் வருகையை யொட்டி மாவட்ட ஆட்சியரின் ஆலோசனைக்கிணங்க ஒரு வாரம் காலமாக பாதுகாப்பு ஏற்பாடு உறுதி செய்வதன் அடிப்படையில் வேலூர் மாவட்டம் முழுவதும் ட்ரோன்கள் பறக்க தடை விதிக்கப்பட்டு, மத்திய மற்றும் மாநில அரசுகளின் பாதுகாப்பு விதிகளின்படி எந்த காரணத்திற்காகவும் ட்ரோன் கேமராக்கள் மற்றும் சிவில் விமானங்கள் பறக்க தடை விதிக்கப்பட்டது. தங்கக் கோயிலை சுற்றியுள்ள அனைத்து பகுதிகளும் சிவப்பு மண்டலமாக அறிவிக்கப்பட்டு பாதுகாப்பு வலுப்படுத்தப்பட்டது.

தமிழ்நாடு வேலூர் மாவட்டத்திற்கு குடியரசுத் தலைவர் வருகை தந்ததை முன்னிட்டு பொதுமக்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தனர். பாரதிய ஜனதா கட்சியின் மாநில மற்றும் மாவட்டத் தலைவர்கள், பொறுப்பு நிர்வாகிகள், அனைத்து பிரிவு நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள், பாஜக தொண்டர்கள், அனைத்து இந்து அமைப்புகளின் நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் அரசுக்கும் காவல் துறையினருக்கும் முழுமையான ஒத்துழைப்பு வழங்கியதாக தெரிவிக்கப்பட்டது.




# உயர் நீதிமன்ற நீதிபதிகளை தேர்வு செய்யும் கொலுஜியத்தை கண்டித்து மாபெரும் அறவழி கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்

மதுரை, டிச.19-

மதுரை பேச்சி அம்மன் படித்துறை ஆறுமுக ச்சந்தியில் தெலுங்கர் முன்னேற்றக் கழகம்நிறுவனர் - மாநிலத்தலைவர் இரா. புகழ் பாலாஜி நாயுடு தலைமையில் தலைமை கழக ஒருங்கிணைப்பாளர்

எவர்கிரீன் C.V.பால முருகன், ஜேபி நாயுடு முன்னிலையில் உயர் நீதிமன்ற நீதிபதிகளை தேர்வு செய்யும் கொலுஜியத்தை கண்டித்து மாபெரும் அறவழி கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் உயர்நீதிமன்ற நீதிபதிகள் நியமனத்தில் சமூக நீதியை உறுதி செய்யக்கோரியும், மொழிவாரி சிறுபான்மையினர் ஆள தகுதியுள்ள தெலுங்கு சமூக வழக்கறி ஞர்களை நீதிபதிகளாக நியமிக்க மறுக்கும் செயலை உணர்த்த கோரியும், உயர் நீதிமன்ற மதுரை அமர்வு துவங்கப்பட்டு 21 ஆண்டுகளில் தெலுங்கு சமூக வழக்கறிஞர்கள் ஒருவர்கூட நீதிபதிகளாக நியமிக்காத போக்கை கண்டித்து 3 அம்ச கோரிக் கைகளை வலியுறு த்திகவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் ஹிந்துபிரபஞ்ச தலைவர் ராஜகோபால்,ஹிந்து ராஷ்ட்ரிய மாநில தலைவர் கிருஷ்ணகுமார் மற்றும் பல்வேறு நாயுடு சமூகத்தை சேர்ந்த தலைவர்கள் பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



■ விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.என்.ஓ.சுகபுத்ரா, தலைமையில், விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன் சிவகாசி மாநகராட்சி மேயர் திருமதி சங்கீதா இன்பம் மற்றும் விருதுநகர் நகர்மன்றத்தலைவர் ஆர்.மாதவன் ஆகியோர் முன்னிலையில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ். ஆர்.ராமச்சந்திரன் மற்றும் மாண்புமிகு நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் ஏழைப்பெண்களுக்கு திருமாங்கல்யத்திற்கு தங்கம் மற்றும் திருமண நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ், 146 பயனாளிகளுக்கு தலா 8 கிராம் தங்க நாணயங்கள் மற்றும் திருமண நிதியுதவிகள் என மொத்தம் ரூ.1.98 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்

# திருவள்ளுவர் சிலை வைக்க அனுமதிக்க வேண்டும்! முதலமைச்சருக்கு கோரிக்கைகடிதம்

காரைக்குடி, டிச.19-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி இந்தியாவில் தமிழ்நாட்டில் செம்மொழி தமிழ்இலக்கியத்திற்கு வலுசேர்க்கும் பரப்புரையும், தமிழ் விழாக்களும் அதிகம் நடக்கும் மாநகரான காரைக்குடியில்தான் தமிழ்த்தாய் ஆலயமும் உள்ள இடமாகும். பார்போற்றும் புகழ்பெற்ற மூத்தமிழறிஞர்களும் வாழ்ந்த இந்நகரத்தில் திருவள்ளுவருக்கு முழு உருவச்சிலை அமைத்திட வேண்டும் என்ற முடிவை எங்கள் தொழில் வணிகக் கழகத்தின் சார்பில் முடிவு செய்து, சங்க உறுப்பினர் வணிகர் ஒருவர் சிலைக்குரிய தொகையை நன்கொடையாக வழங்கிட முன்வந்துள்ளதையும்



தெரிவித்துள்ளோம். மாநகராட்சிக்குரிய இடங்களாக இருக்கும் முடியரசன் சாலையிலுள்ள "அறிவு சார் நூலகம்" கட்டிட வளாகத்திற்குள்ளாகவும், அல்லது பெரியார் சிலை எதிர்புறம் நூறடி சாலை ஆரம்பிக்கும் காவல்அறைக்குரிய இடத்திலாவது ஒதுக்கித் தருமாறு மாநகராட்சியில் கோரிக்கை மனுவை ஒன்றரை ஆண்டுக்கு முன்பு நேரில் சென்றுஅளித்து அனுமதிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. ஆனால்இதுவரை திருவள்ளுவர் சிலை நிறுவிட முடியாமல் காலதாமதத்தை எண்ணி, கவளை அடைகின்றோம். எனவே இக்கோரிக்கையினை நிறைவேற்றி செயல்படுத்தித் தருமாறு, தமிழ்நாடு முதலமைச்சருக்கு கோரிக்கை கடிதம் அனுப்பியதில் தக்க நடவடிக்கைக்கு உதவி புரியுமாறு கேட்டுக் கொண்டுள்ளதாக, தலைவர் சாமிதிராவிடமணி, செயலாளர் லயன். S.கண்ணப்பன் ஆகியோர் செய்தியாளரிடம் தெரிவித்துள்ளனர்.




# குழந்தைகள் நலன் சார்ந்து பணியில் ஈடுபடும் மருத்துவர்கள் மற்றும் காவல் துறையினருக்கான திறன் வளர்ப்பு பயிற்சி

சேலம், டிச.19-

சேலம் மாவட்ட ஆட் சியரக கூட்ட அரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி., தலைமையில், தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையத் தலைவர் திருமதி புதுக்கோட்டை விஜயா முன்னிலையில், குழந்தைகள் நலன் சார்ந்து பணியில் ஈடுபடும் மருத்துவர்கள் மற்றும் காவல் துறையினருக்கான திறன் வளர்ப்பு பயிற்சி நடைபெற்றது.

தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையமானது குழந் தைகள் உரிமை மீறல்களை தடுத்து பாதுகாப்பதிலும், வழக்குகளை விசாரிப்பதற்கும் உரிமையியல் நீதிமன்றத்திற்கு இணையான அதிகாரங்களைக் கொண்டுள்ளது. மேலும், காவல் துறை, நீதிமன்றம் மற்றும் பிற அலுவலகங்களிலிருந்து உரிய ஆவணங்களைக் கோரிப் பெறப்பட்டு, குழந்தை களுக்கு எதிரான குற்றங்கள் மற்றும் உரிமைகள் மீறல்கள் தொடர்பான குற்றங்களை துரிதமாக விசாரிக்க குழந்தைகள் நீதிமன்றங்கள் அமைத்து கண்காணிக்கப்படுகிறது.

உரிமை மீறல்கள் காரணமாக பாதிக் கப்படும் குழந்தைகளுக்கு உரிய நிவாரணம் மற்றும் உரிய மறுவாழ்வு நடவடிக்கை குறித்து அரசுக்கு அல்லது சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பரிந்துரை செய்வது உள்ளிட்ட அதிகார ங்களைக் கொண்டு இவ்வாணையம் செயல் படுகிறது.

இன்றையதினம் நடைபெறும் இப்பயிற்சியில் அனைத்து மகளிர் காவல் ஆய்வாளர்கள், குழந்தை நல காவல் அலுவலர்கள், சிறப்பு சிறார் காவல் உதவி பிரிவு, ஆட்கடத்தல் தடுப்பு பிரிவு, மகப்பேறு மருத்துவர்கள் மற்றும் குழந்தைகள் நல மருத்துவர்கள் ஆகியோருக்கு பாலியல் ரீதியான துன்புறுத்தலால் பாதிக்கப்பட்ட குழந் தைகளை குழந்தை நேய முறையில் அ ணுகுதல் குறித்து பயிற்சி வழங்க ப்பட்டது.

# தாம்பரத்தில் கிறிஸ்துமசை முன்னிட்டு இயேசு கிறிஸ்து பிறப்பு முதல் உயிரித்தெழுதல் வரை தத்ரூபமாக நடித்து உலக சமாதானம் அடைய வேண்டி சிறப்பு பிரார்த்தனை

தாம்பரம், டிச.19-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி சண்முகம் சாலை மார்க்கெட் பகுதியில் உள்ள தாம்பரம் கிறிஸ்துவ வியாபாரிகள் சார்பில் கடந்த 30 வருடங்களாக கிறிஸ்மஸ் பெருவிழா இப்பகுதியில் நடைபெற்று வருகிறது அதன்படி இந்த வருடமும் கடந்த இரண்டு நாட்களாக மார்க்கெட் பகுதியில் கிறிஸ்மஸ் திருவிழா நிகழ்ச்சி நடைபெற்றது இன்று குரோம்பேட்டை நியூ லைப் ஜெம்ஸ் சபையின் தலைமை போதகர் பாஸ்டர். ஐசக் டேனியல் குழுவினர் கிறிஸ்து பிறப்பு, இறப்பு, உயிர்த்தெழுதல் ஆகியவைகள் குறித்து அனைவரும் கவரும் விதமாகவும், மெய் சிலிர்க்கும் வண்ணமாகவும், தத்ரூபமாக நாடகத்தை நடத்தினர்.



இதில் பொதுமக் களையும், பார்வையாளர் களையும் வெகுவாக கவரும் விதமாக கிறிஸ்து சிலுவையில் அறைப் படுவதற்கு முன்னர் சாலைகளில் ரத்த காயங்களுடன் சிலுவையை சுமந்து செல்லும் இயேசு கிறிஸ்து போல் வேடம் அணிந்து அனைவரையும் பிரம்மிக்க வைக்கும் விதமாக நடித்துக் காட்டினர்.

முடிவில் கிறிஸ்து உயிர்த்தெழுந்து அனைவருக்கும் நற்செய்தியை அறிவிக்கும் செய்தியை கூறி கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள் தெரிவித்து ஏழை எளியவர்களுக்கு கிறிஸ்மஸ் அன்பளிப்பை வழங்கினார்.

பின்னர் பொதுவாழ்வு ஜேம்ஸ் பேராலயத்தின் தலைமை போதகர் ஐசக் டேனியல் செய்தியாளர்களை சந்தித்து...

இந்த கிறிஸ்மஸ் நன்னாளில் கிறிஸ்து பிறப்பு முதற்கொண்டு சிலுவையில் அறையப்பட்டு மூன்றாம் நாள் உயிர்த்தெழும் வரை நடைபெறும் நிகழ்வுகளை நாங்கள் தத்துரூபமாக இங்கே நடித்து அனைத்து மக்களுக்கும் கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு நல்வாழ்த் துக்கள் தெரிவித்தோம் இந்நிகழ்ச்சியை தாம்பரம் கிறிஸ்துவ வியாபாரிகள் சங்கத்தின் சார்பில் கடந்த 30 வருடங்களாக செய்து வருகின்றனர் இதன் முக்கிய நோக்கம் நாட்டில் அசாதாரண சூழ்நிலை நிலவி வருகிறது ஆங்காங்கே சண்டை சச்சரவுகள் கலவரங்கள் ஆகியவைகள் இல்லாமல் உலக சமாதானம் அடைய வேண்டி இதுபோன்ற நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறோம் எனவே இந்த நாளில் உலக சமாதானம் அடைந்து அனைவரும் சுபிட்சமாக வாழ வேண்டுமென கூறினார்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161